Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

FRIDAY, JUNE 25, 2021

வெள்ளிக்கிழமை ஜூன் 25, 2021 | ஒளி: 07 கதிர்: 31 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# ‘நீதியில்லாத நாட்டில் சூரியன் பிரகாசிக்காது’



**‘விடுதலை’ ஒரு மதமாகவும் நடைமுறையாகவும் மாற்றப்பட்டுள்ளது**

**ஒரு நாட்டுக்குள் பல சட்டங்கள் செயற்படுகின்றன என்பது நிரூபணம்**

“மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் உறுதிப்படுத்திய, உயர்நீதிமன்ற நீதியசர்கள் ஐவர் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்தாத நாடொன்று உருவாகியுள்ளது” எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மனைவி சுமனா பிரேமசந்திர, “நீதியில்லாத நாட்டில் சூரியன் பிரகாசிக்காது” எனத் தெரிவித்துள்ளார்.

எனது கணவனை சுட்டுப் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவுக்கு, ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

# 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ், 94 பேர் நேற்று (24) விடுதலை செய்யப்பட்டனர். அவர்களில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடராமல் இருந்த, 16 தமிழ் அரசியல் கைதிகளும் அடங்குகின்றனர். துமிந்த சில்வாவைத் தவிர, ஏனைய 77 பேரும் சிறிய குற்றங்களுக்காக சிறையில் வாடியவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# வெளியேறினார் துமிந்த சில்வா

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் தொழிற்சங்க ஆலோசகரும், முன்னாள் அமைச்சருமான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலை வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ், பொசன் தினமான நேற்று (24) விடுதலை செய்யப்பட்டார்.

அதற்கான ஆவணங்கள், சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர், சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து, நேற்றுப் பிற்பகல் அவர் வெளியேறினார்.

# ‘11 மாதங்களில் விடுதலை; நேற்றுப் பொது மன்னிப்பு’

■ எம்.றொசாந்த்

“11 மாத காலத்தில் தண்டனைக் காலம் முடிவடைந்து விடுதலையாக இருந்தவருக்கே, ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுத்துள்ளார்” என குரலற்றவரின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# துமிந்தவுக்கு மன்னிப்பு; அமெரிக்கா கண்டனம்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கொலைக் குற்றவாளி என உயர் நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்டவருமான துமிந்த சில்வா, ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டமையை அமெரிக்கா கண்டித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி. டெப்பிலிட்ஸ் கண்டனம் வெளியிட்டு, தனது டுவிட்டரில் பதிவொன்றை இட்டுள்ளார்.

உயர் நீதிமன்றம், 2018ஆம் ஆண்டில் உறுதிசெய்த துமிந்த சில்வாவின் தீர்ப்பை தற்போது மன்னிப்பதென்பது

தொடர்ச்சி P2



# ‘ரணிலின் மூளை, மஹிந்தவின் சரீரம் இணைய வேண்டும்’

முன்னாள் பிரதமர் மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் தேசிய ரீதியாக, கலாசார ரீதியாக, சமய ரீதியாக சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் தலைவர் என்ற ரீதியில் தனது அதிகாரத்தில் இருந்துகொண்டு

தொடர்ச்சி P2



# நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விசேட உரை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு இன்று (25) இரவு 8:30 மணிக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் உரை, சகல இலத்திரனியல் ஊடகங்களிலும் அஞ்சல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. “நாட்டின் கொரோனா நிலைமைகள் மற்றும் பொருளாதாரம்” எனும் தொனிப்பொருளிலேயே ஜனாதிபதி உரையாற்றவுள்ளதாக என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிலாவத்துறையில்

# 1,363 கி.கி மஞ்சள் மூடைகள் சிக்கின

**அல்லிராணிக் கோட்டைக்கு மேற்குப் பகுதியிலுள்ள கடற்பரப்பில் கைதாகினர்**

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிலாவத்துறை கடற்கரை பகுதியில் நேற்று (24) அதிகாலை 1,363 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டதோடு, அவற்றை சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்தார்கள் என்ற சந்தேகத்தில் மூவரை,

தொடர்ச்சி P2




# ‘இறையாண்மைக்கு சவாலானது’



‘ஒரு நாட்டில் நிதித்துறை செயல்முறை ஜனநாயக நிர்வாகத்தின் மிக முக்கியமான காரணமாகக் கருதப்படுகின்றது. சட்டத்தின் இறையாண்மை மட்டுமல்லாது, இலங்கையின் சுதந்திரமும் இன்று சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதை துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பிலிருந்து தெளிவாகிறது’ என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கான சரியான நடைமுறையை ஜனாதிபதி பின்பற்றியுள்ளாரா என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# மஹிந்த-ரணில் சந்தித்துப் பேச்சு

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அவசர சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

தேசிய பட்டியல் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னரே, இச்சந்திப்பு இடம்பெறுள்ளது. பாராளுமன்றத்தின் இரண்டாவது மாடியிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தாய்க்கும் கொரோனா இறந்த சிசுவுக்கும் தொற்று

**தாய், நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றம்**

■ சுதத்.எச்.எம்.ஹேவா

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட கிரேட்வெஸ்டன் தோட்டத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்த கர்ப்பிணி பிரசவித்த சிசு உயிரிழந்துள்ளது என, கொட்டகலை சுகாதார வைத்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்தத்தாய், லிந்துலை வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

# மணல் கொள்ளையில் வாள் வெட்டு; ஒருவர் படுகாயம்

**வாய்த் தர்க்கம் ஏற்பட்டு, வாள்வெட்டில் முடிவடைந்தது**

■ எம்.றொசாந்த்

நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் அமலில் உள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் மணல் கொள்ளையர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்.கொடிகாமம், கெற்பேலி பகுதியில் நேற்று (24) மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: சட்டவிரோதமான முறையில் மணல் கொள்ளையில் ஈடுபட்ட இரு குழுக்களுக்கு இடையில், மணல் ஏற்றும்

தொடர்ச்சி P2

துமிந்தவின் விடுதலை தொடர்பில்

# சட்டத்தரணிகளின் ஆறு கேள்விகள்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கொலைக் குற்றவாளி என உயர் நீதிமன்றால் தீர்ப்பிடப்பட்டவருமான துமிந்த சில்வா, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டமை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேள்வியெழுப்பியுள்ளது.

துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கும்போது, உரிய செயல்முறை பின்பற்றப்பட்டதா என்பது குறித்து விளக்கம் அளிக்க வேண்டுமென, ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# வெள்ளவத்தையில் புதுத் தொற்று

**58 பேர் சிக்கினர்**

கொழும்பு மாவட்டத்தில் புதிய வகையான கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி, கொம்பனித்தெரு ஆகிய பிரதேசங்களிலேயே புதிய வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# ‘நீதித்துறையை மீற வேண்டாம்’

**மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டவரை பொது மன்னிப்பு பட்டியலில் சேர்க்கும் முடிவை விலக்கவும்**

நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு, மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு பட்டியலில் சேர்க்கும் முடிவை, ஜனாதிபதி விலக்கிக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி, பொதுமன்னிப்பை ஜனாதிபதி, தடையின்றிப் பயன்படுத்துவதன் மூலம் நீதித்துறையை மீற வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

# 76 மரண தண்டனை கைதிகள் உண்ணாவிரதம்

**ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு கைதிகள் கோரிக்கை**

மரண தண்டனை விதிக்கப்பட்டு, மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மரண தண்டனை கைதிகள் 76 பேரும், உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

“இன்று (நேற்று) பகல் போசனத்தை எடுத்துக்கொள்ளாது உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் குதித்துள்ளனர்” என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரான சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘நீதியில்லாத நாட்டில் சூரியன் பிரகாசிக்காது’

இதுதொடர்பில், பிரேமசந்திரவின் மனைவி சுமனா பிரேமசந்திர எழுதியுள்ள குறிப்பொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

‘விடுதலை’ ஒரு மதமாகவும் நடைமுறையாகவும் மாற்றியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், பாரத லக்ஷ்மனை படுகொலை செய்த ஒரு மனித படுகொலையாளிக்கு, ஜனாதிபதி விசேட பொது மன்னிப்பை வழங்கி, விடுவித்துள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனச் சாட்சியிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இது பிழையென நன்றாகத் தெரியும். கொலையாளி, பொசன் போய தினத்தன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். ‘ஒரு நாட்டுக்குள் பல சட்டங்கள் செயற்படுகின்றன’ என்பதை நிரூபிப்பதற்கே, படுகொலையாளர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் மீது அன்பு செலுத்திய லக்ஷ்மன் பிரேமசந்திர, மற்றுமொரு சிங்களவரான தமித், தமிழரான குமார், ஹசீம் என்ற முஸ்லிம் ஆகிய மூவரின் உடல்களின் மீதும் ஏறி நின்று, துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்ட படுகொலையாளர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையாளி விடுவிக்கப்பட்டு, சிறையில் நீதி அடைக்கப்பட்டுள்ளது. நீதி இல்லாத ஒரு நாட்டில் சூரியன் பிரகாசிக்காது. சட்டம் இருக்கும் நாட்டில், குற்றவாளி தண்டிக்கப்படுவார். சட்டம் இல்லாத நாட்டில், நீதி மறுக்கப்பட்டு, தண்டனை இல்லாமல் குற்றவாளிகள் விடுவிக்கப்படுகிறார்கள் என்றும் அந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# துமிந்தவுக்கு மன்னிப்பு; அமெரிக்கா கண்டனம்

சட்டத்தின் ஆட்சியைக் குறைத்து மதிப்பீடுக்கு உட்படுத்துவதாக உள்ளதாக அந்த டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை அரசாங்கம் செய்துள்ள ஐ.நாவின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்குப் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான சமமான அணுகல் அடிப்படைக்கு இது விரோதமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (பி.டி.ஏ) கீழ் தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் விடுவிக்கப்பட்டமையை வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# ‘இறையாண்மைக்கு சவாலானது’

ஜனாதிபதியின் செயற்பாடு, பாராளுமன்றமும் நீதித்துறையும் அவர் விரும்பிய படி செயற்பட வேண்டுமென்பதைக் காட்டுவதாகவும் “இது ஜனநாயக ஆட்சிக்கு கடுமையான அச்சுறுத்தலாகும்” என்றார்.

# ‘11 மாதங்களில் விடுதலை; நேற்று பொது மன்னிப்பு’

16 தமிழ் அரசியல் கைதிகளுக்கு, நேற்று (24) ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு, விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சூரியகாந்தி ஜெயச்சந்திரன் விடுவிக்கப்பட்ட நிலையில், அவரை நேரில் சந்தித்து முருகையா கோமகன் நலம் விசாரித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “இன்றைய தினம் (நேற்று) விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளில் பலருக்கு தண்டனைக் காலங்கள் நிறைவடைய சில மாதங்களே உள்ளன. இந்நிலையில், பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜெயச்சந்திரனும் கடந்த 13 ஆண்டுகளாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கான- தண்டனைக் காலம் இன்னமும் 11 மாத காலத்தில் நிறைவடையவுள்ள நிலையிலேயே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் பலர், 11 வருடங்கள் முதல் 26 வருடங்களுக்கு மேலாகக் கூட தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில், விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கக் குற்றச்சாட்டில் சிலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் உட்பட குற்றச்சாட்டுகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், தீர்ப்பு வழங்கப்பட்டு மேன் முறையீடு செய்தவர்கள் எனப் பல அரசியல் கைதிகள் இன்னும் சிறையில் வாடுகின்றனர்.

அவர்களுக்கு குறைந்த பட்சமாக புனர்வாழ்வு அளித்தாவது அவர்களை- விடுவிக்க வேண்டமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

அண்மையில், அரசதரப்பில் இருந்து அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுத்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் பொது மன்னிப்பு வழங்கிய ஜனாதிபதிக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்” என்றார்.

# சட்டத்தரணிகளின் ஆறு கேள்விகள்

கொலைக் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும்போது, விசாரணையை மேற்கொண்ட நீதிபதி, சட்டமா அதிபர், நீதி அமைச்சர் ஆகியோரின் பரிந்துரைகளைப் பெறவேண்டுமென அந்தச் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கான சூழ்நிலைகள், மன்னிப்புப் பெற அவர் எப்படி தகுதியானவர் என்பதற்கு சில்வா தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையையும் பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அதேநேரம் குறித்த சம்பவத்துடன், தொடர்புடைய குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்ட ஏனையவர்கள் தண்டனை அனுபவிக்கும் போது, துமிந்த சில்வாவை மாத்திரம் எவ்வாறு அதிலிருந்து காப்பாற்றுவது உள்ளிட்ட 06 கேள்விகளை அவர்கள் தொடுத்துள்ளனர்.

# மணல் கொள்ளையில் வாள் வெட்டு; ஒருவர் படுகாயம்

இடத்தில் வாய் தர்க்கம் ஏற்பட்டு, அது வாள்வெட்டில் முடிவடைந்து உள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்காகிய 50 வயதுடைய நபர், படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தாய்க்கும் கொரோனா இறந்த சிசுவுக்கும் தொற்று

அவர், பிரசவித்த சிசு நேற்று முன்தினம் (23) உயிரிழந்துள்ளது. இதனையடுத்து தாயின் நிலை மோசமடைந்தமையால், அவர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டதில், கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, உயிரிழந்த சிசுவுக்கு அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்ட போது, சிசுவுக்கும் தொற்று உறுதியானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 76 மரண தண்டனை கைதிகள் உண்ணாவிரதம்

மரண தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து, தங்களுக்கான தண்டனையை ஆயுள் சிறைத்தண்டனையாக மாற்றுமாறு, மரண தண்டனை கைதிகள் கோரியுள்ளனர்.

இந்நிலையில், இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நிறைவுக்கு கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகள், சிறைச்சாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

# 1,363 கி.கி மஞ்சள் மூடைகள் சிக்கின

கடற்படையினர், பொலிஸார் இணைந்து கைதுசெய்துள்ளனர்.

சிலாவத்துறை, அல்லிராணிக் கோட்டைக்கு மேற்குப் பகுதியிலுள்ள கடற்பரப்பில் வைத்து சிலாவத்துறை பொலிஸார், கடற்படையினர் இணைந்து தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, 26 மூடைகளில் பொதி செய்யப்பட்டிருந்த 1,363 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள்களைக் கைப்பற்றியதோடு, மேற்படி மூவரையும் கைது செய்துள்ளதோடு, அவர்கள் பயன்படுத்திய படகும் படகின் வெளியிணைப்பு இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளை சிலாவத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர், மன்னார் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

# வெள்ளவத்தையில் புதுத் தொற்று

வெள்ளவத்தையில் 58 பேரும், கொம்பனித்தெருவில் 23 பேரும், நாரஹேன்பிட்டியில் 21 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

நேற்று (24) காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில், கொழும்பு மாவட்டத்தில் மட்டும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 318 பேர் இனங்காணப்பட்டனர்.

பம்பலப்பிட்டி-13 பேர், மட்டக்குளி - 36 பேர், அவிசாவளை-39 பேர், தெமட்டகொட -12 பேர், கிராண்ட்பாஸில்-11 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த, 24 மணிநேரத்தில், நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 2,196 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய இலங்கை பிரஜைகள் 18 பேரும், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆடைத்தொழிற்சாலையில் தடுப்பூசி செலுத்தப்பட்டது

முல்லைத்தீவு, ஆடைத்தொழில்சாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசியை செலுத்தும் செயற்பாடுகள் நேற்று (24) முன்னெடுக்கப்பட்டன.

அத்தொழிற்சாலையில், சுமார் 1,250 க்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பணியாற்றி வருகின்றனர். நேற்று மாலை வரையிலும், 582 ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. ஏனையவர்களுக்கு இன்று (25) செலுத்தப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில், இந்தத் தடுப்பூசிகள் மாவட்ட இராணுவ மருத்துவமனை மருத்துவர்களால் செலுத்தப்பட்டன.

(படங்களும் தகவலும் செ. கீதாஞ்சன்)









# ‘ரணிலின் மூளை, மஹிந்தவின் சரீரமும் இணைய வேண்டும்’

நாட்டுக்காக சேவைகள் செய்தவர் ரணிலே எனத் தெரிவித்த அபயராம விகாரையின் விகாராதிபதி முருதொட்டுவே ஆனந்த தேரர், கட்சி பேதமின்றி தான் இதனைச் சொல்வதாகவும் ரணிலும் மஹிந்தவும் ஒன்றிணைந்தால் நாட்டுக்கு சிறந்த சேவையாற்ற முடியும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது என்றார்.

ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினராக நேற்று முன்தினம் (23) பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர், அபயராம விகாரைக்குச் சென்று தேரரிடம் ஆசி பெற்ற போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், மக்களினதும் நாட்டினதும் பிரச்சினைகளில் கவனம் செலுத்தாமல், தமது சொந்தப் பிரச்சினைகளிலேயே முழு அமைச்சரவையும் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்த அவர், பாரிய எதிர்பார்ப்புடன் புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்த மக்கள், இன்று எம்மைக் குறை கூறுகின்றனர் என்றார்.

எனவே, சிறந்த தலைவரான ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து மீண்டும் நாட்டுக்கு சிறந்த சேவைகளை எதிர்பார்ப்பதாக் கூறிய அவர், “முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் பல குறைப்பாடுகள் காணப்பட்டாலும் அவர் நாட்டுக்காக பல சேவைகளை ஆற்றியுள்ளார். எனினும் கடந்த காலங்களை புறந்தள்ளி, எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்போம்” என்றார்.

## பசில் தனிமை



அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டு, தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஷா, நாட்டு மக்களுக்குத் தேவையான நிவாரணங்கள் வழங்கப்படும் என்றார்.

மேலும், கொரோனா வைரஸ் நிலைமைகளால் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்களை அரசாங்கம் வழங்குமெனவும், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பொருளாதார அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ, நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாரிய சேவைகளை செய்துள்ளதாகவும் தெரிவித்ததோடு, இதனாலேயே தெற்காசியாவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இலங்கை முக்கிய நாடாகக் கடந்த காலங்களில் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

### பாடசாலைகளைத் திறந்தால்

## ‘மாணவர்களுக்கு ஆபத்தாகலாம்’



பாடசாலைகளை விரைவாகத் திறக்க முடியாதெனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், பாடசாலைகளை உடனடியாகத் திறந்தால், மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்குப் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படலாமெனவும் எச்சரித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த கல்வி அமைச்சர், விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளின்படியே பாடசாலைகளை மீளத் திறக்கும் தினங்கள் தொடர்பில் தீர்மானிக்கப்படுமெனவும், இது இலங்கைக்கு மாத்திரம் ஏற்பட்ட விசேட நிலையல்ல; உலகின் பல நாடுகள் இப்பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றன.

சமூக இடைவெளியைப் பேணி, கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதே மாணவர்களுக்குப் பாதுகாப்பாக அமையுமெனவும் கூறினார்.

### அரசாங்கத்தின் காயத்துக்கு

# ‘சஜித் அணி மருந்துபோடுகிறது’



நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து, அரசாங்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் உதவி செய்துள்ளதாகத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, அரசாங்கத்தின் காயத்துக்கு ஐ.ம.ச மருந்து போடுவதாகவும் சாடியுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பாலித ரங்கே பண்டார, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக, அரசாங்கத்துக்குள் காணப்படும் நெருக்கடிகளைத் தீர்த்து வைக்க ஐ.ம.சக்தியினர் உதவி செய்திருக்கிறார்கள். இந்த நெருக்கடிகள் தொடர்பில், பசில் ராஜபக்ஷ தலையிட்டு உதவி செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

**“ அரசாங்கத்துக்குள் காணப்படும் நெருக்கடிகளைத் தீர்த்து வைக்க ஐ.ம.சக்தியினர் உதவி செய்திருக்கிறார்கள். இந்த நெருக்கடிகள் தொடர்பில், பசில் ராஜபக்ஷ தலையிட்டு உதவி செய்துள்ளது. அரசாங்கத்துக்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைகளால், அரசாங்கத்துக்குள் உள்ள பிளவை, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சரி செய்துவிடும்**

அரசாங்கத்துக்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைகளால், அரசாங்கத்துக்குள் உள்ள பிளவை, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சரி செய்துவிடும். அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள காயத்துக்கு மருந்து போடும் வேலையையே சஜித் அணி செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# ‘பட்டினியால் இறக்கும் நிலை வரும்’

அரசாங்கத்தின் மோசமான நிர்வாகத்தால், மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலை ஏற்பட அதிக நாள்கள் செல்லாதெனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, நாட்டின் அனைத்துத் துறைகளும் பாரதூரமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்ததாவது: நாட்டை சுபீட்சமடையச் செய்வதாகக் கூறிக்கொண்டு, ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் ஆட்சியில், சுகாதாரம், கல்வி, பொருளாதாரம், விவசாயம் ஆகிய அனைத்துத் துறைகளும் பாரதூரமாக வீழ்ச்சியடைந்துள்ளன.



இதேவேளை, தற்போதைய அரசாங்கத்தின் மோசமான நிர்வாகத்தால், மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலை ஏற்பட அதிக நாள்கள் செல்லாது. நாட்டு மக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், எரிபொருள்களின் விலை அதிகரிப்பை உடனடியாக அரசாங்கம் திரும்பப் பெற வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளோம். இப்பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது நாட்டை நேசிக்கிறவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். உரத் தட்டுப்பாட்டால், விவசாயிகள் பாரியப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், ராஜபக்ஷர்கள் இப்போது விவசாயிகள் தொடர்பில் வாய் திறப்பதில்லை. ஒரு பிரச்சினையை மூடி மறைக்க, மற்றொரு பிரச்சினையை உருவாக்குகிறார்கள் எனவும் குற்றம் சுமத்தினார்.

### நட்டஈடு கோரி

## உயர்நீதிமன்றம் சென்ற மீனவர்கள்

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால், பாணந்துறையிலிருந்து நீர்கொழும்பு வரையிலான பிரதேசங்களில், பாதிக்கப்பட்ட மீனவர்கள், தங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கப்படவேண்டுமென்று கோரி, உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.



இந்த மனுவின் பிரதிவாதிகளாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, துறைமுக அதிகார சபையின் தலைவர், சுற்றாடல் அமைச்சின் செயலாளர், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் இலங்கை முகவர்கள் ஆகியோரது பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கட்டார், இந்தியா ஆகிய நாடுகள் எம்.வி எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல், அந்நாடுகளுக்குள் நுழைவதற்கு அனுமதி மறுத்திருந்தனர். இந்நிலையில், இத்தகைய ஆபத்தான நிலையிலுள்ள இக்கப்பலை இலங்கைக்குள் நுழைய அதிகாரிகள் அனுமதியளித்ததன் ஊடாக, அதிகாரிகள் அவர்களது கடமைகளில் கவனக் குறைவாக இருந்துள்ளனர்.

மேலும், நீர்கொழும்பு முதல் பாணந்துறை வரையிலான கடற்பரப்புக்குள், கடற்றொழில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், மீனவர்கள் வாழ்வாதாரங்களை இழந்துள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தாய்லாந்து தூதரக நிலத்தை

## போலியான பத்திரம் தயாரித்து விற்பனை செய்த சட்டத்தரணி கைது

இலங்கையிலுள்ள தாய்லாந்து தூதரகத்துக்குச் சொந்தமான நிலத்தைப் போலியான பத்திரம் தயாரித்து, விற்பனை செய்த சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், கருத்துத் தெரிவித்த ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, கொழும்பு 07இலுள்ள சி.டபிள்யூ.டபிள்யூ கண்ணங்கரா மாவத்தையில் அமைந்துள்ள நிலத்தை, விற்பனை செய்ததாகக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய, குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால், சட்டத்தரணி கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் விசாரணையடுத்து, போலி பத்திரம் தயாரித்தும் சட்டத்தரணியின் அதிகாரத்தைப் பயன்படுத்தியும் இக்காணி விற்பனை செய்யப்பட்டுள்ளமை, கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காணி விற்பனையாளரும் காணியைக் கொள்வனவு செய்தவரும் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.


## சீதாவகபுர மாநகர சபை
## விலைமனு கோரல் விளம்பரம்

சீதாவகபுர மாநகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடைமுறை படுத்துவதற்காக கீழே அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலை திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையிள் (CIDA) பதிவு செய்யப்பட்டு தகுதிபெற்ற ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விலைமனு கோரப்படுகின்றது.

1. மீள் வழங்கப்படாத ரூபா.2,000.00 பணத்தை சீதாவகபுர மாநகர சபைக்கு கட்டணமாக செலுத்தி விலைமனு விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்
2. 2021.07.19 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்குள் கீழே அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு பினைப் பணத்தை வைப்பிள்ளிட்டு அல்லது 2021.10.20 ஆம் திகதி வரை தலைவர், சீத்தாவக்கபுர மாநகர சபை என்ற பெயரில் இலங்கையில் நடைமுறையில் உள்ள வியாபார வங்கியினால் வழங்கப்படுட்ட செல்லுபடியான விலைமனு காப்புறுதியினை விலைமனு விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து சமர்பிக்க வேண்டும்.
3. சரியான முறையில் நிரப்பப்பட்ட விலைமனு விண்ணப்பப்பத்திரத்தை 2 பிரதிகளுடன் சமர்பிக்க வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என்று குறிப்பிட்டு இரு வேறு கடித உறையில் இட்டு அந்த இரண்டு கடித உறைகளையும் ஒரு கடித உறையினுள் இட்டு பின்னர் மூன்று கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் “சீதாவக பிரதேச செயலக பிரிவில் சீதாவகபுர நகர சபை அலுவலக கட்டிடம் மற்றும் ஆவனக்காப்பகம் இடங்களை மேம்படுத்துவத்றகாக” என்று குறிப்பிட்டு சீல் வைக்கப்பட்டு 2021.07.20 ஆம் திகதி மு.ப 10.00 மணி அல்து அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு தலைவர், சீத்தாவக்கபுர மாநகர சபை, அவிசாவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும் அல்லது சீத்தாவக்கபுர மாநகர சபையில் உள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும்.
5. மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை நகர சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்
6. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதுடன் விலைமனு சபையின் முடிவே இறுதியான தீர்மானமாகும். மேலதிக விபரங்களுக்கு 036-2222275 / 036-2222285 இலக்கத்தின் ஊடாக தொழில் பிரிவு பணி கண்காணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவனை

| வகை இலக்கம | வேலைத் திட்டம | (ஒப்பந்தத்தின் பெறுமதி) வெட் மற்றும் 1% நிச்சயமற்ற செலவுகள் தவிர்ந்த | விலைமனு பினைப் பணம்/ விலைமனு காப்புறுதியின் பெறுமதி (ரூபா) | (CIDA) பதிவு பொருட்கள் |
|---|---|---|---|---|
| 01 | சீதாவக பிரதேச செயலக பிரிவில் சீதாவகபுர நகர சபை அலுவலக கட்டிடம் மற்றும் ஆவனக்காப்பகம் இடங்களை மேம்படுத்துவத்றகாக | ரூபா. 7,451,483.05 | ரூபா. 80,000.00 | C6 அல்லது C7 |

கே.ஏ.ரணவீர
தலைவர்,
சீத்தாவக்கபுர மாநகர சபை,
அவிசாவளை.
2021.06.23





முல்லைத்தீவில் அநாதரவான பிள்ளைகளுக்கு

# ‘வீடு வழங்கவும்’

நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்டத்தில். தாய், தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கி. வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ச.சுயன்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், போர்க் காலத்தில் பெருமளவான பிள்ளைகள் தாய். தந்தை இருவரையும் இழந்து, உறவினர்களின் வீடுகளிலும் உதவி இல்லங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.



இந்நிலையில் வழங்கப்படுகின்ற வீட்டுத் திட்டங்களை, தாய், தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டுமென்றார்.

குறிப்பாக தாய், தந்தையற்ற பெண் பிள்ளைகளுக்கு, வீட்டுத் திட்டம் வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ச.சுயன்சன் கேட்டுக்கொண்டார்.

# திருமணம் செய்த மணமகனுக்கு அபராதம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில், சுகாதார விதிமுறைகளை மீறி திருமணம் செய்த மணமகனுக்கு, 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து, மல்லாகம் நீதவான் நீதிமன்றம், நேற்று முன்தினம் (23) உத்தரவிட்டுள்ளது.

ஜூன் 4ஆம் திகதியன்று நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது, அதிகளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த சுகாதார பிரிவினர், மணமக்கள் குடும்பத்தினர் உட்பட திருமணத்தில் கலந்துகொண்டவர்களை தனிமைப்படுத்தினர்.

> **“மணமகனின் சகோதரர் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், சுகாதார பிரிவினரின் அனுமதியின்றி வெளிநாடு சென்றுள்ளார். அவர் தொடர்பான தகவல்களையும் சுகாதார பிரிவினருக்கு வழங்கி, அவர்களின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறும், மணமகனுக்கு நீதவான் உத்தரவிட்டார்**

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட 78 பேருக்கு, கடந்த 16ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், 13 பேருக்கு தொற்று உறுதியானது.

இந்நிலையில், சுகாதார பிரிவினரிடம் திருமணத்துக்கான அனுமதியை மணமகனே பெற்றிருந்தமையால், மணமகனை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு. அவருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில், வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு, நேற்று முன்தினம் (23) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மணமகன் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, மணமகனை கடுமையாக எச்சரித்த நீதவான், 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

இதேவேளை, மணமகனின் சகோதரர் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், சுகாதார பிரிவினரின் அனுமதியின்றி வெளிநாடு சென்றுள்ளார். அவர் தொடர்பான தகவல்களையும் சுகாதார பிரிவினருக்கு வழங்கி, அவர்களின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறும், மணமகனுக்கு நீதவான் உத்தரவிட்டார்.



வவுனியா தவிசாளர் கைது;

# மன்னாரில் கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

க. அகரன்

வவுனியா நகர சபை தவிசாளர் கைது செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிராக, மன்னார் நகர சபையில், நேற்று முன்தினம் (23) கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

மன்னார் நகர சபையின் 40ஆவது அமர்வு, தவிசாளர் அன்டனி டேவிற்சன் தலைமையில், நடைபெற்றபோது, ஜூன் 15ஆம் திகதியன்று, வவுனியா நகர சபை தவிசாளர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, மன்னார் நகர சபை உறுப்பினரான சம்பூர்ணம் இரட்ணசிங்கத்தால் பிரேரணையொன்று சபையில் முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து, இந்தப் பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கண்டனத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இதன்போது உரையாற்றிய நகர சபை உறுப்பினர் சம்பூர்ணம் இரட்ணசிங்கம், வவுனியா நகர சபை தவிசாளரின் கைது நடவடிக்கை என்பது, மக்கள் ஆணையை பெற்றவர்களின் அதிகாரத்தைப் பறிக்கின்ற செயற்பாடாகுமென்றார்.

# இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில், நேற்று (24) காலை, இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஆறுமுகத்தான்குளம் கிராமத்தைச் சேர்ந்த 26 வயதுடைய குடும்பஸ்தரே, இவ்வாறு வெற்றுக் காணியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக, இவர் தனது உயிரை மாய்த்திருக்கலாமென, முல்லைத்தீவு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி



முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு. நேற்று (24) கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய, கிளிநொச்சியில், அறிவியல் நகரில் இயங்கி வரும் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கும், முல்லைத்தீவில், புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது.
(படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன், செ. கீதாஞ்சன்)

இராஜாங்க அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்ட

# ‘இளைஞனின் மரணத்துக்கு நீதி வேண்டும்’

## கோரிக்கை தாங்கிய பதாகைகள் காட்சி; சடலம் நல்லடக்கம்

வா.கிருஸ்ணா

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக, இராஜாங்க அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்ட மணல் லொறி சாரதியான மகாலிங்கம் பாலசுந்தரத்தின் சடலம், நேற்று முன்தினம் (23) மாலை பெருமளவான மக்களின் கண்ணீருடன் ஊறணி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இதன்போது, ‘அமல் எங்கள் நண்பனை மீட்டுத்தர முடியுமா?’, ‘கரங்கொடுத்து தூக்கிவிட்டவர்களை




காலடியில் நசுக்கும் விசமிகளின் பசிக்கு இரையாகிய அப்பாவி இளைஞனின் மரணத்துக்கு நீதிவேண்டும்’ போன்ற கோரிக்கை தாங்கிய பதாகைகளை, சடலம் தாங்கிய பேழையுடன் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுமார் ஒரு மணி நேரம் மாத்திரமே அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக சடலம் வைக்கப்பட்டிருந்தது. அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் அஞ்சலி செலுத்தினர்.

இதனையொட்டி, சடலம் வைக்கப்பட்டிருந்த பகுதியெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

உயிரை மாய்த்த காரைதீவு சிறுமியின் சடலம்

# ஆறாம் நாள் ஒப்படைப்பு

## நேற்று அடக்கம் செய்யப்பட்டது

வி.ரி. சகாதேவராஜா

கடந்த வெள்ளிக்கிழமையன்று, தனது உயிரை மாய்த்துக் கொண்ட காரைதீவைச் சேர்ந்த சுகுமார் டினேகா என்ற 17 வயதுச் சிறுமியின் சடலம், ஆறாம் நாளன்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து, சிறுமியின் சடலம், காரைதீவு இந்து மயானத்தில் நேற்று (24) காலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த ஆறு நாள்களாகக் கையளிக்கப்படாமல் இழுபறியிலிருந்த சிறுமியின் சடலத்தைக் கையளிக்க அரசும், நீதித்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி, சிறுமியின் குடும்பத்தினர், உறவினர் மேற்கொண்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்தே, சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

திருமண வாழ்க்கையில் ஈடுபட்ட காரைதீவைச் சேர்ந்த இந்தச் சிறுமி, கடந்த வெள்ளிக்கிழமை (18) சடலமாக மீட்கப்பட்டார். சடலம், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தைப் பார்வையிட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி இப்ராஹிம் நஸ்ரூல் இஸ்லாம், உடற்கூற்று பகுப்பாய்வு பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

ஆனால், மரணத்தில் சந்தேகம் இருப்பதாக சிறுமியின் குடும்பத்தினர்



சொல்வதால், உடற்கூற்று பகுப்பாய்வு பரிசோதனையை மேற்கொள்ள முடியாது என்று சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பதில் சட்ட வைத்திய அதிகாரி மறுத்து, இதை விசேட சட்ட வைத்திய அதிகாரிதான் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இதையடுத்து, அம்பாறை பொது வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டது.

இருப்பினும், திடீர் மரண விசாரணை அதிகாரியின் உத்தரவின் பிரகாரம் உடற்கூற்று பகுப்பாய்வு பரிசோதனையை மேற்கொள்ள மாட்டார் என்றும் நீதவானின் உத்தரவு வேண்டும் என்றும் அம்பாறை பொது வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரி மறுத்துவிட்டார்.

சம்மாந்துறை பொலிஸார், இதை எழுத்துமூலம் விசேட சட்ட வைத்திய அதிகாரியிடம் கோரியபோதும் அவர் எழுத்தில் கொடுக்க மறுத்து விட்டார். சம்மாந்துறை நீதவான் ஐ. என். ரிஸ்வானுக்கு, பொலிஸார் விவரங்களைத் தெரிவித்தனர்.

இதைனையடுத்து, விசேட சட்ட வைத்திய அதிகாரி மன்றில் ஆஜராகி விளக்கம் தர வேண்டுமென, நீதவான் ஐ. என். ரிஸ்வான் உத்தரவிட்டார். ஆயினும், விசேட சட்ட வைத்திய அதிகாரி மன்றுக்கு ஆஜராகத் தவறியதால் பிடியாணை உத்தரவை, செவ்வாய்க்கிழமை (22) நீதவான் பிறப்பித்தார்.

இந்நிலையிலேயே, அம்பாறை பொது வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரி, புதன்கிழமை சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

சட்ட ஏற்பாடுகளை நீதவான் எடுத்துரைத்து, இவரைக் கடுமையாக எச்சரித்தார்.

“இனி மேல் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டேன்” என்று தெரிவித்து மன்னிப்புக் கோரிய விசேட சட்ட வைத்திய அதிகாரி, காரைதீவு சிறுமியின் உடலத்தின் மீதான பரிசோதனையை செய்து கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

அதனையடுத்து, நேற்று முன்தினம் (23) காலை அம்பாறை பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு, அன்று மாலை உறவினரிடம் சடலம் கையளிக்கப்பட்டது. மறுநாள் அதாவது நேற்று (24) சிறுமியின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இறந்து கரையொதுங்கிய

# சிவப்பு நிற டொல்பின்

பாறுக் ஷிஹான்

கல்முனை, பாண்டிருப்புக் கடற்கரையில் இறந்த நிலையில் சிவப்பு நிற டொல்பின், நேற்று முன்தினம் (23) கரையொதுங்கியுள்ளது.

சுமார் 4 முதல் 5 அடி வரையான நீளமான இந்த டொல்பினை, மீனவர்கள் கண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, அவ்விடத்துக்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி, கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர், பொதுச்



சுகாதார பரிசோதகர், பொலிஸார் வருகை தந்து, பகுப்பாய்வுக்காக டொல்பினின் உடலத்தைக் கொண்டு சென்றுள்ளனர்.

கிழக்கு மாகாணக் கரையோரங்களில் கடந்த ஒரு வாரமாக இறந்த ஆமைகள், டொல்பின்கள் கரையொதுங்கி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# பெண் பொலிஸார் இருவருக்கு கொரோனா தொற்று

கனகராசா சரவணன்


மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் 76 பொலிஸாருக்கு நேற்று முன்தினம் (23) மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில், இரு பெண் பொலிஸார் உட்பட மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் விடுமுறையில் தமது வீடுகளுக்குச் சென்ற நிலையில், அங்கு அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்ட போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.



இதனையடுத்தே, மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றிய பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸார் 76 பேர் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது, தொற்று உறுதி செய்யப்பட்ட மூவரும், கொரோனா சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.



# தேங்காய்கள் திருடிய இருவர் சிக்கினர்

எச்.எம்.எம்.பர்ஸான்

தேங்காய்களைத் திருடிய இருவரை, தோட்ட உரிமையாளர்கள், பொதுமக்கள் இணைந்து மடக்கிப் பிடித்து, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த சம்பவமொன்று, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் மூவர் இணைந்து தேங்காய்களைத் திருடிய போது, இருவர் வசமாக சிக்கியுள்ளனர்.

தனது தோட்டத்தில் தொடர்ந்தும் தேங்காய்கள் திருடப்படுவதாகவும் அதனைக் கண்காணித்த போது இத்திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை பொதுமக்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்ததாக தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு திருடப்பட்ட 52 தேங்காய்களுடன் இரு நபர்களையும் வாழைச்சேனை பொலிஸார் கைதுசெய்தனர்.


# அறிவிப்பை மீறிய மருந்தகத்துக்கு சீல்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி கொவிட் -19 தடுப்புச் செயலணியின் அறிவிப்பை மீறி, இரவு நேரத்திலும் திறக்கப்பட்டிருந்த மருந்தகம் ஒன்றுக்கு, நேற்று முன்தினம் (23) இரவு சீல் வைக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள மருந்தகமே இவ்வாறு சீல் வைக்கப்பட்டது.

காத்தான்குடியில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், காத்தான்குடியில் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் உட்பட மருந்தகங்கள் அனைத்தும் மாலை ஆறு மணியுடன் மூடப்பட வேண்டுமென, காத்தான்குடி நகருக்கான கொவிட் -19 தடுப்புச் செயலணி அறிவித்திருந்தது.



இந்த அறிவித்தலை மீறி, மேற்படி மருந்தகம், மாலை ஆறு மணியுடன் மூடாமல் இரவு நேரத்திலும் திறந்திருந்ததால் அதற்கு சீல் வைக்கப்பட்டதாகவும் மருந்தகத்தின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, குறித்த மருந்தகத்தின் உரிமையாளருக்கு சொந்தமான மேலும் இரண்டு மருந்தகங்களும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## உலர் உணவுப் பொருட்கள் கையளிப்பு...

நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்றால் வருமானங்களை இழந்த 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான உலர் உணவுப்பொருள்கள், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணனால் வழங்கப்பட்டன. (நீலமேகம் பிரசாந்த்)





அரசியல் கைதிகளின் விடுதலையில்

# ‘அரசியல் உள்ளது’

### இராதா எம்.பி தெரிவிப்பு

■ எஸ்.கணேசன்

“நல்லாட்சி அரசாங்கத்திலும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதில் நல்ல நோக்கம் இருந்தது” எனத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன், “தற்போது இந்த அரசாங்கத்தில் 16 அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இதன் பின்னணியில் அரசியல் உள்ளது” என்றார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று (24) கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“பாராளுமன்றத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அறிவிப்பு விடுத்த இரு நாள்களில் கைதிகளின் விடுதலை இடம்பெறுகின்றது. எனவே, தமிழ் மக்கள் மீதுள்ள அக்கறையில் அவர்களை




விடுத்திருந்தால் வரவேற்போம்” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவர் கருத்துரைக்கையில், “நாட்டில் தொழிலாளர்களுக்கென சட்டம் உள்ளது. சர்வதேச சமவாயங்களும் உள்ளன. எனினும், 1,000 ரூபாய் சம்பள உயர்வின் பின்னர், தோட்ட நிர்வாகங்களும் முகாமையாளர்களும் தன்னிச்சையாக, சர்வாதிகாரிபோல் செயற்படுகின்றனர்.

20 கிலோ கிராம் கொழுந்து பறிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு நடைபெறும் காட்டுச் சட்டத்துக்கு முற்றுபுள்ளி வைக்கவேண்டும்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் இது குறித்து கலந்துரையாடியதாகத் தெரிவித்த அவர், கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஐந்து நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஏனைய நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கின்றன. எது எவ்வாறு அமைந்தாலும் தொழிற்சங்கங்களுக்கும், நிர்வாகத்துக்குமிடையில் ஒப்பந்தமொன்று இருப்பதே சிறப்பு” என்றார்.



## கொரோனா செய்தித் துளிகள்

1. தனிமைப்படுத்தப்பட்டுள்ள கினிகத்தேனை- கரோலினா தோட்டத்தில் 24 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (சுதத்.எச்.எம்.ஹேவா)

2. பலாங்கொட- எல்லராவ பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர்கள் 87 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (க.மஹிந்தகுமார்)

3. நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக அடையாளம் காணப்பட்ட 153 தொற்றாளர்களுடன், மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6,459ஆக அதிகரித்துள்ளது.

மாத்தளையில்

## கொரோனா மரணங்கள் 100 ஐ கடந்தன

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் கொரோனா மரணங்கள் 102ஆக அதிகரித்துள்ளதாக மாத்தளை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த 24 மணித்தியாலத்தில் 18 தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்ட நிலையில், மாத்தளை மாவட்டத்தில் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 5,275ஆக அதிகரித்துள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உக்குவளையில் 1,039 தொற்றாளர்களும் தம்புளை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் 526, கலேவலயில் 645, இரத்தோட்டையில் 522, நாவுலயில் 275 பேரும், தம்புளையில் 384 பேரும் மாத்தளையில் 425 பேரும் மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் 289 பேரும் யட்டவத்தையில் 281 பேரும் பள்ளேபொலயில் 259 பேரும் அம்பகங்கோரலையில் 227 பேரம் வில்கமுவையில் 203, லக்கலையில் 157 தொற்றாளர்களும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் தற்போது மாத்தளை மாவட்டத்தில் 380 குடும்பங்களைச் சேர்ந்த 943 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைக்கூலிக்கு மதுபான உற்பத்தி:

## வர்த்தகர்களை கைது செய்ய உத்தரவு

■ ஆ.ரமேஸ்



நானுஓயா பிரதேசத்தில் சட்டவிரோதமாக மதுபான உற்பத்தியில் ஈடுபடும் வர்த்தகர்களைக் கைதுசெய்ய, நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவான் லுசாக்கா தர்மகீர்த்தி, நானுஓயா பொலிஸாருக்கு விசேட உத்தரவை, நேற்று முன்தினம் (23) வழங்கியுள்ளார்.

நானுஓயா பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர், 22ஆம் திகதி நானுஓயா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நேற்று முன்தினம் (23) நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, சந்தேகநபர் சட்டவிரோத மதுபானத்தைத் தயாரிக்கின்றாரா அல்லது சட்டவிரோத மதுபானம் தயாரிக்கும் வர்த்தகர்களிடம் கைக்கூலியாக செயற்படுகிறாரா என, சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிவன்ஜோதி யோகராஜனிடம் சந்தேகநபரிடம் வினவுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, தான் கைக்கூலியாக செயற்படுவதாகவும் நாளொன்றுக்கு 30 போத்தல் சட்டவிரோத மதுபானத்தை, வர்த்தகர் ஒருவரின் உதவியுடன் விற்பனை செய்வதாகவும் சந்தேகநபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரை 2,000 ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதவான், கைக்கூலிகளை வைத்து, சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபடும் வர்த்தகர்களைக் கைதுசெய்து, எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் நானுஓயா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

‘குமாரவத்தை வீதியை புனரமைக்கவும்’

## பிரதேச மக்கள் வேண்டுகோள்

■ ஜயக்குமார் ஷான்



மொனராகலை நகரிலிருந்து குமாரவத்தைக்குச் செல்லும் பிரதான வீதி, சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்துக்கு சேதமடைந்து, எவ்வித புனரமைப்பும் இல்லாமல் பாரிய சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன், குமாரவத்தை தோட்டத்தின் ஏனைய பிரிவுகளான சிரிகல தோட்ட மக்களும் இந்த வீதியையே பயன்படுத்தும் நிலையில், இவ்வீதி மிகவும் மோசமான நிலையிலுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

தேர்தல் காலங்களில் மாத்திரம் இப்பிரதேசத்துக்கு வருகை தரும் அரசியல்வாதிகள், இந்த வீதியை புனரமைத்துத் தருவதாக வாக்குறுதி வழங்கி விட்டுச் சென்றாலும் தேர்தல் முடிந்த பின்னர் அப்பிரதேசங்களுக்கு வருவதைத் தவிர்த்து விடுவதாக குற்றஞ்சுமத்தும் மக்கள், துரிதமாக இந்த வீதியை புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றனர்.

பதிவு செய்யப்படாத

## கைகழுவும் திரவங்கள் மொனராகலையில் சிக்கின

■ சுமணசிறி குணதிலக

மொனராகல நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் பதிவு செய்யப்படாத நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 150,000 ரூபாய் பெறுமதியான கைகழுவும் திரவங்கள், நுகர்வோர் அதிகார சபையின் மொனராகல மாவட்ட அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமலாகும் வகையில், 2003 இலக்கம் 9 என்ற நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான 10 (1) ஆ (11) உறுப்புரையின் கீழ், நுகர்வோர் அதிகார சபைக்குப் பகிரப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு, குறித்த பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.



5,000 ரூபாய் விவகாரம்:

## முன்னாள் உறுப்பினரும் இந்நாள் உறுப்பினரும் மோதல்

### இருவரும் வைத்தியசாலையில்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை, கொடபொல பிரதேசத்தில் 5,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவு விநியோகத்தில் ஏற்பட்ட மோதலில், மாத்தளை மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் உறுப்பினர் ஒருவரும் காயமடைந்து, மாத்தளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பிரதேசத்துக்கு விநியோகிக்கப்பட்ட உலர் உணவுப்பொருள்கள் சிலருக்கு விநியோகிக்கப்படாமையை அடிப்படையாக வைத்தே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதுடன், இது தொடர்பில் மாத்தளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பெலிஹுல்ஓயா வைத்தியசாலையில்

## நோயாளர்கள் அனுமதி இடைநிறுத்தம்

### வைத்தியர் பற்றாக்குறையே காரணம்

■ க. மஹிந்தகுமார்




பலாங்கொடை, பெலிஹுல்ஓயா பிரதேச வைத்தியசாலையில் நோயாளர்களை அனுமதிக்கும் நடவடிக்கை கடந்த ஐந்து மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஐந்து மாதங்களுக்கு முன்னர், குறித்த வைத்தியசாலையில் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்ததுடன், வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவும் 24 மணித்தியாலமும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது மாலை ஐந்து மணி வரையே வெளிநோயாளர் பிரிவும் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், அவசர சிகிச்சைக்காக இப்பிரதேச மக்கள் 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் வைத்தியர் கபில கன்னங்கரவிடம் வினவியபோது. வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாகவே நோயாளர்களை அனுமதிக்கும் செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, வெளிநோயாளர்களுக்கு மாத்திரம் சிகிச்சயைளிக்கப்படுகிறது. அவசர நோயாளிகள் கொண்டு வரப்பட்டால், அவர்களை பலாங்கொடை வைத்தியசாலைக்கு அனுப்பும் நடவடிக்கையை எடுத்துள்ளோம் என்றார்.

அத்துடன், தற்போது பெலிஹுல்ஓயா வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மாத்திரமே கடமையில் ஈடுபடுவதுடன், வைத்தியர் பற்றாக்குறை பூர்த்தி செய்யப்பட்டால் மீண்டும் முன்பைப் போலவே வைத்தியசாலை 24 மணிநேரமும் திறக்கப்படும் என்றார்.

## ரணிலை வாழ்த்தி தமிழ்க் கொலை

■ ஆ.ரமேஸ்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் (23) ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிலையில், அவரை வரவேற்பதற்காக, இராகலை நகரில் ஒட்டப்பட்ட வாழ்த்து சுவரொட்டிகளில் தமிழ் மொழி கொச்சைப்படுத்தப்பட்டுள்ளது.




சப்ரகமுவ ஆளுநரும்

## நிவாரணம் வழங்கினார்

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் வெளிநாடுகளில் வாழும் அவரது உறவினர்கள் ஒன்றிணைந்து, சப்ரகமுவ மாகாணத்தில் மிகவும் வறுமையின் கீழ் வாழ்பவர்களுக்கு நிவாரணம் வழங்கினர்.

இதற்கமைய இரத்தினபுரி மாவட்டத்தின் கரங்கொட, அங்கமுவ, எலபாத்த, பலாவெல ஆகிய பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலினி லொக்குபோத்தாகமவும் கலந்துகொண்டார்.



# 16 'புலி'களுக்குள் ஒழிந்து வெளியேறிய 'ஓர் அரசியல் ஆயுதம்'

இலங்கை வரலாற்றைப் பொறுத்தமட்டில், பொசன் நோன்மதி தினம், பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட நாளாகும். இவ்வாறானதொரு நாளில்தான், மஹிந்த தேரர் இலங்கை தீவில் காலடி பதித்து, பௌத்தமத சிந்தனைகளை அறிமுகப்படுத்தினார்.

மஹிந்த தேரர், மிஹிந்தலைக்கு வருகைதந்துகொண்டிருந்த வேளையில், அங்கு ஆட்சியிலிருந்த தேவனம்பியதீசன் என்ற மன்னன், மான் ஒன்றை வேட்டையாடுவதற்கு முயன்றுள்ளார், அம்மானை, மன்னரிடமிருந்து உயிருடன் மஹிந்த தேரர் மீட்டெடுத்தார் என்பது வரலாற்றுச் சம்பவமாகும்.

அந்தப்பின்னணியைக் கொண்ட பொசன் தினத்தன்றும், ஜனாதிபதியால் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுகின்றது. சிறு குற்றங்களைச் செய்தவர்கள், தண்டப்பணம் செலுத்த முடியாதவர்கள், வயது முதிர்ந்தவர்கள் என வகைப்படுத்தி, பொதுமன்னிப்பு வழங்கப்படும்.

ஆனால், இம்முறை சற்று வித்தியாசமான முறையில், தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும், சுமார் 15 ஆண்டுகளாகச் சிறைவாசம் அனுபவித்து வருவோரில் 16 பேரும், பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் (ஜூன் 24) பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட 94 பேரில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடராமல் இருந்த, 16 தமிழ் அரசியல் கைதிகளைத் தவிர, ஏனைய 77 பேரும் சிறிய குற்றங்களுக்காக சிறையில் வாடியவர்களாவர்.

94 ஆவது நபர் இன்றேல், முதலாவது நபராக, முன்னாள் அமைச்சர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலை வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வா அடங்குகின்றார்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு, பல தருணங்களில் 'அரசியல் ஆயுதம்' ஆகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் தவறில்லை. 1978ஆம் ஆண்டு, அரசியலமைப்புக்குப் பின்னர், இன்றைய நாள்வரையிலான மன்னிப்புகளைப் பார்க்கும்போது, அவை தெட்டத்தெளிவாகத் தெரிகின்றன.

தமிழ் அரசியல் கைதிகளின் அவலக்குரல், ஆட்சியாளர்களின் காதுகளுக்கு ஓரளவுக்குக் கேட்டிருக்கிறது, 'புலிகளை விடுவித்துவிட்டனர்' எனும் விமர்சனத்துக்குள் சிக்கிக்கொள்ளாது, துமிந்தவையும் விடுவித்து, சமன்பாட்டை சமப்படுத்தியுள்ளது நேற்றைய பொதுமன்னிப்பு.

மரண தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவின் குடும்பத்தால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள், கடந்த ஜனாதிபதி, பொதுத் தேர்தலின்போது முன்னெடுத்த பிரசாரங்கள், 'தாமரை மொட்டை' மலரச்செய்தன. அதன் பிரதி உபகாரமே இந்தப் பொதுமன்னிப்பாகும்.

1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் 34ஆம் பிரிவின் ஊடாக, பொதுமன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரம், ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 'ஜனாதிபதியின் பொது மன்னிப்பு', இந்நாட்டில், மிகத் தவறாகப் பயன்படுத்தப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்படும் அதிகாரங்களில் ஒன்றாக இருக்கிறது.

பொது மன்னிப்புக்கான அளவு கோல்களுக்கு வரையறை இன்மையால், மேன்முறையீடுகளுக்கு அப்பாற்சென்று, பொதுமன்னிப்புகள் வழங்கப்படுகின்றன. 16 புலிகளுக்குள் ஒழிந்து வெளியேறிய துமிந்த சில்வா, 'ஓர் அரசியல் ஆயுதம்'; அந்த 'ஆயுதம்', எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## ஈழத்தமிழரின் தமிழக மயக்கம்:

# தெளியாத போதை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஈழத்தமிழர்களின் தமிழக மயக்கம் புதிதல்ல. கடந்த அரை நூற்றாண்டில் அது வெவ்வேறு வடிவங்களை எடுத்திருக்கிறது. தமிழகத்தின் மீதும் குறிப்பாக, தமிழக அரசியல் மீதும் வைக்கப்பட்ட நம்பிக்கைகள், தொடர்ச்சியாகப் பொய்ப்பிக்கப்பட்ட போதும், 'சூடுகண்டாலும் அஞ்சாது, அடுப்பங்கரை நாடும் பூனை' மனநிலையில், தொடர்ந்து நம்பிக்கை வைப்பதை இன்றும் காணுகிறோம்.

எம்.ஜி. இராமச்சந்திரனில் தொடங்கி, சீமான் வரை, ஈழப்போராட்டத்தை சரிவர விளங்காத, அணுக இயலாத, தங்கள் சுயஅரசியலுக்குப் பயன்படுத்தியோரை நம்பி, சீரழிந்தவர்கள் ஈழத்தமிழர்கள். இன்றும் அந்தநிலை வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது. இந்தத் 'தமிழக மயக்கம்' வெறுமனே அரசியலுடன் மட்டுப்பட்டதல்ல!

தமிழக மக்களிடையே உள்ள ஆதரவு, இலங்கை தமிழரது போராட்டத்துக்கு ஒரு தார்மீக ஆதரவாயிருக்கிறது என்பதில் ஐயமில்லை. அதைச் சந்தர்ப்பவாத நோக்கங்களுக்காக யாரும் பயன்படுத்துவதற்கு, இலங்கை தமிழர் உடந்தையாக இருக்கக் கூடாது.

போர் அதன் கோர முடிவை எட்டுகின்ற போது, தமிழகத்தில் இளம் தலைமுறையினரிடையே ஈழத்தமிழர்களுக்காக அறம்சார்ந்த தீரம்மிக்க ஆதரவு எழுந்தது. அதை மடைமாற்றுவது, இந்திய அதிகாரத்துக்கு அவசியமானது. இதற்கு சீமான் பயன்பட்டார்.

சீமான் தமிழக இளைஞர்களின் நேசத்துக்கு உரிய திரையுலகப் பிரமுகராகத் தன்னை உயர்த்திக் கொள்ள, அவருக்கு ஈழத் தமிழரின் கண்ணீர் கைகொடுத்த அளவுக்கு, திரைப்படத் துறையில் அவருடைய ஆற்றல் கைகொடுத்திருக்கவில்லை. ஆனால், இன்று ஈழப்பிரச்சினைக்குக் காப்புரிமை வாங்கியது போல செயற்படுகிறார். அதற்குப் புலம்பெயர் ஈழத்தமிழர்களின் வற்றாத நிதி உதவுகிறது.

ஈழத்தமிழர்களை, விடுதலைப் புலிகளுடன் சமன்செய்து, ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் குறுக்குகின்ற பணியை, சீமானும் அவர்தம் ஆதரவாளர்களும் செய்கிறார்கள்.

சீமானும் அவர்தம் அடிவருடிகளும், ஈழத்தமிழர்களின் விடுதலையை வாங்கித் தருவார்கள் என்று, புலம்பெயர் ஈழத்தமிழர்களில் ஒருபகுதியினர் நம்புகிறார்கள். இது ஆச்சரியமானதல்ல! ஏனெனில், ஈழத்தமிழர்களின் விடுதலைக்குச் செய்ய வேண்டியவை பற்றிய சரியான புரிதல் இருந்திருந்தால், இந்த நிலையை நாம் அடைந்திருக்க மாட்டோம் அல்லவா?

எம்.ஜி.ஆரைச் சந்திக்க, பிரபாகரனைப் பழ நெடுமாறன் அழைத்துச் சென்றபோது, 'ஈழத்தை பெற, எவ்வளவு பணம் தேவை' என்று எம்.ஜி.ஆர் கேட்டதாகவும் அதற்குரிய தொகையைப் பிரபாகரன் சொன்னதாகவும், கேட்டதற்கு அதிகமாகவே எம்.ஜி.ஆர் கொடுத்ததாகவும், பழ நெடுமாறன் தனது நூலில் எழுதியிருக்கிறார். இது விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே உரித்தானதல்ல; பிற இயக்கங்களிலும் இந்த மனநிலை இருந்தது.

இதன் தொடர்ச்சியாக, விடுதலைப் புலிகளுக்குப் பணம் கொடுத்து, விடுதலையைப் பெறலாம் என நினைத்த புலம்பெயர் தமிழர்களின் மனநிலையின் தொடர்ச்சியே, சீமானுக்கான புலம்பெயர் தமிழர்களின் நிதியாதரவு.

சில விடயங்களை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினையில், எந்த நிலையிலுமே தமிழக அரசு, மத்திய அரசை மீறிச் செயற்படத் துணிந்ததில்லை. உண்மையில், அந்த விதமான எண்ணம் இருந்ததுமில்லை; அதுவொரு தோற்றமயக்கம். அன்றிலிருந்து இன்றுவரை, இலங்கை விடயத்தில், இந்தியா குறுக்கிட வேண்டும் என்ற கோரிக்கை, நடை முறைச் சாத்தியமற்றது மட்டுமன்றி, அடிப்படையிலேயே தவறானதும் கூட. ஈழத்தமிழரின் விடுதலையை குத்தகைக்காரர்களால் பெற்றுத்தர இயலாது.

1983 வன்முறைக்குப் பின்பு, குறிப்பாக, 1984 முதல் 1987 வரை, போர்ச் சூழல் ஏற்படுத்திய உக்கிரமான நெருக்கடிகளின் விளைவாக, உலகின் பல்வேறு நாடுகளுக்கும் ஈழத்தமிழர்கள் சிதறி ஓடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. இந்தியாவுக்குப் போனவர்களில் வசதியுள்ளவர்கள், பிரதான நகரங்களில் குறிப்பாகச் சென்னையில், வசதிகளுடன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள்.

கையில் எதுவுமில்லாமல் உயிருக்கு அஞ்சி ஓடியவர்களில் பெரும்பான்மையானவர்கள், முன்பு இலங்கையில் கற்பனை செய்திராத விதமாக அகதி முகாங்களிலும், 'அகதி' என்ற அடையாளமின்றி வெளியிலும் அன்று முதல் அல்லற்பட்டு வருகிறார்கள்.

இலங்கை மக்களின் அவலங்கள் பற்றி, எந்த விதமான அக்கறையுமே இல்லாமல், அவர்களுடைய அவலத்தை அரசியல் பிழைப்பாக்கிக் கொண்ட தமிழக அரசியல் தலைமைகள் ஒருபுறமும், அதற்குக் கொஞ்சமும் சளைக்காத, இலங்கை தமிழ்ச் சமூகத்தின் வேறு சில பலவீனங்களைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகிற தமிழகத்தின் வேறு சில குழுக்களும், ஈழத்தமிழரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்திகள் என்ற மாயையை உருவாக்கினார்கள்.

தாங்கள் உலகத்தால் கவனிக்கப்படவில்லை; தங்களைத் தமிழகம் கண்டுகொள்ளவில்லை என்ற ஆதங்கம், இலங்கை கலைஞர்களிடமும் எழுத்தாளர்களிடமும் நீண்டகாலமாகவே இருந்து வந்திருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல, இந்தியாவிலிருந்து வருகிற 'குப்பை'களை எல்லாம், கலை இலக்கியம் என்று கொண்டாடிப் பரவலாக்குகிற ஒரு வணிகக் கூட்டமும் இருந்து வந்திருக்கிறது.

கோவில் திருவிழாக்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து சின்னமேளமும் மேளக்காரர்களும் வந்த நிலை, இன்று பெரும்பாலும் இல்லை. என்றாலும், அதன் இடத்தில் தமிழ்ச் சினிமா, சின்னத் திரை, இந்தியக் கலைஞர்களது நிகழ்ச்சிகள் என்பனவே, எமது பொழுதுபோக்குகளாக மாறியிருக்கின்றன.

இன்று, பேரினவாதத்துக்கு முகங்கொடுக்கத் தடுமாறுகிற ஒரு சமூகத்திடமும் புலம் பெயர்ந்தோரிடமும், ஒரு நல்ல மாற்றுச் சிந்தனை உருவாக்குவதற்கு வழிகாட்ட, தமிழ்த் தேசியத்தால் இயலவில்லை. எனவே, தமிழ் மக்களிடையிலும் படைப்பாளிகள் இடையிலும் கலைஞர்கள் மத்தியிலும் அறிஞர்கள் என்று சொல்லப்படுகிற தரப்பினரிடையிலும் உள்ள மன உளைச்சலை வைத்துப் பணம் பண்ணுவதில், தமிழகத்துச் சஞ்சிகைகள் சிலவும் வெளியீட்டு நிறுவனங்கள் சிலவும், புதிய உச்சங்களை எட்டியுள்ளன.

ஈழத்து எழுத்தாளர்களுக்குச் சடங்காசாரமான அங்கிகாரம், ஈழ எழுத்தாளர் குழுக்களுடன் விளம்பர, வணிகத் தொடர்புகள், இடையிடையே ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிச் சூடான விவாதங்களைக் கிளறிவிடுவது போன்ற உபாயங்கள் மூலம், தம்மை நிலை நிறுத்திக் கொண்ட சஞ்சிகைகளும் இலக்கியப் பிரமுகர்களும் பற்றி நிறையவே கூறமுடியும்.

படைப்பாளிகளிடமிருந்து பணம் பறித்து, அவர்கள் எழுத்துகளை வெளியிட்டுக் காசுபார்க்கும் இந்திய பதிப்பகங்கள் ஏராளம் வலம்பருகின்றன. தங்களது எழுத்துகளுக்கு நூல் வடிவம் வேண்டி ஏங்குகிறவர்களது அவலத்தை, தங்களுக்குப் பணமாக்கும் கலையை அவர்கள் கற்றிருக்கிறார்கள். அவர்கள் வேண்டுகிற பணத்தை வழங்கி, தமிழ்நாட்டில் புத்தகம் பிரசுரமாவதை பாக்கியமாகக் கருதும் புலம்பெயர்ந்தோர் ஏராளம் உளர்.


இப்படியெல்லாம், ஈழத் தமிழர் ஏமாறக் காரணம் என்ன? நாம், நமக்கான ஒரு பண்பாடு உடையவர்கள் என்றும் நம்மிடையே உள்ள ஆற்றல்களைச் கொண்டு நம்மை அறிந்து, நம்மை மேம்படுத்தி மற்ற எல்லாருடனும் நல்லுறவு பேண வேண்டியவர்கள் என்பதையும் நாம் மறந்து விடுகிறோம்.

நமது உயர்வுக்குத் தேவையான பண்பாட்டுச் செயற்பாடுகள் நம்மிடையே நலிந்து வருகின்றன. நமது இசையும் நடனமும் தமிழகத்தில் பார்ப்பனியம் போட்ட கோட்டுக்கு வெளியே நகர மறுக்கிறது. அதை, 'எமது' என்று சொல்லி ஏமாறுகிறோம். தமிழகத்தில், அவர்களது கலைஞர்களுக்குக் கிடைக்கிற சிறிய அங்கிகாரமோ வெறும் உபசாரமான புகழுரையோ, நமக்குப் போதுமாகிறது. அதை ஏற்படுத்தவல்ல உள்ளூர்த் தரகர்கள் புரவலர்களாக, இலக்கியவாதிகளாக, ஊடக ஜாம்பவான்களாக, அரசியல்வாதிகளாக உலா வருகிறார்கள்.

நம்மிடம் வாசிப்புப் பழக்கம் போதாது. இளைய தலைமுறையினரிடம் அதை ஊக்குவிக்கின்ற ஆர்வமும் நம்மிடம் மிகக் குறைவு. மரபின் பேரால் நடக்கின்ற கேலிக் கூத்துகளிலும் சமூகத்துக் கேடான பொழுது போக்குகளிலும், நாசமாகின்ற காசையும் காலத்தையும் நமது எழுத்துகளையும் மேடைக் கலைகளையும் ஓவியம், சிற்பம் போன்றவற்றையும் அறியவும் ஊக்குவிக்கவும் துணிவோமானால், நம்மை மற்றவர்களின் தயவில் வைத்திருக்கிற அவலம் நமக்கு நேராது.

புலம் பெயர்ந்த தமிழ் மக்கள், வெறும் உணர்ச்சி வசப்பட்டு நம்மைப் பற்றிய போலி அக்கறைகளுக்கும் வஞ்சகமான புகழுரைகளுக்கும் மயங்காமல், வெறுமனே பணத்தை வழங்குவதுடன் தங்களது பொறுப்பு முடிந்து விடுவதாக இல்லாமல், எல்லாவற்றிலும் தொடர்ச்சியான விமரிசன முறையிலான ஈடுபாடு காட்டுவார்கள் என்றால், அவர்கள் தங்களுக்கும் உலகத் தமிழ்ச் சமூகத்துக்கும் நல்ல சேவையாற்றுகின்றவர்களாவார்கள்.

தேங்கிய நீரில் தான் பாசி படருகிறது. நோய் பரப்பும் தீய உயிரினங்கள் விளைகின்றன. சமூகம் என்பது, பாய்கிற நதி போல எப்போதும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளுமாயின் அது, என்றென்றும் உயிரோட்டத்துடன் இருக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

உரத்த குரலில் மேடையில் பேசினால், அவரால் முதன்மை பெற முடியாது. அரிய, நல்ல கருத்துகளை, மெதுவாகப் பேசினாலும் அது, மக்களின் செவிவழி புகுந்து, மூளையில் பதிந்துவிடுகின்றது.

மைதானம், பரந்த வெளி என்பவற்றில் ஒலிபெருக்கியின் துணையின்றிப் பேசுவது கஷ்டமானது. மண்டபங்களில் தணிந்த குரலில் பேசலாம். சிலரது குரல்கள், உச்சஸ்தானியில் இருப்பதுண்டு. அரசியல்வாதிகள் சிலரின் குரல்கள், உச்சமீடிறன் கொண்டவை. எவர் எப்படி உரையாற்றினாலும், அவர்களின் உரையை உன்னிப்பாகக் கேட்க வேண்டும். உருவத்தை வைத்து, அறிவை எடைபோட முடியாது.

பேசும் மொழியில் வார்த்தைகள் பஞ்சமின்றியும் உச்சரிப்புகள் தெளிவாகவும் வார்த்தைகளின் அர்த்தங்களுக்கு ஏற்ப, உணர்வும் உயிர்ப்பும் மிக்கதாகவும் நகைச்சுவை கலந்து கலகலப்பாகவும் பிறமொழிகளின் கலப்பின்றியும் இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியவாறும் பேசவேண்டும்.

உரையில் கண்ணியம் வேண்டும். கண்டபடி சவால்விடுத்தல் ஆகாது. எவரையும் ஏளனம் செய்வதும் புண்படுத்துவதும் தற்புகழ்ச்சி செய்வதும் தவிர்க்க வேண்டும்.

முக்கியமாக, உண்மை பேச வேண்டும். பொய்களை உண்மைபோல் உரைத்தால், சமூகத்தில் அழுக்குப் படிந்துவிடும். தன்னிலை மறந்து பேசுவது கேரிக்குரியது. பேச்சாளரின் பேச்சில் உறுதியும் கம்பீரமும் முகத்தில் புன்முறுவலும் பிரகாசிக்க, மக்களை நோக்கிய வண்ணம் உரையாற்ற வேண்டும். சொற்சுத்தம் மிகச்சிறப்பு.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### உள்ளூர் கடல்அட்டை தொழிலாளர்களின் 'வயிற்றில் அடி'

முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்பகுதியில், பாரம்பரியமாகக் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரம், பாதிக்கப்படுவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இதற்குக் காரணம், சாலை கடற் பகுதியில், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் நூற்றுக்கணக்கான படகுகளை வைத்து, கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட்டுள்ளமையாகும். குறிப்பாக, 10 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், 200க்கும் அதிகமானவர்கள், இவ்வாறு உள்ளூர் மீனவர்களின் 'வயிற்றிலடித்து' வருகிறார்கள். கற்பிட்டி, புத்தளம், நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்களே சாலைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து, உள்ளூர் மீன்வளங்ளை அபகரித்துச் செல்கிறார்கள் என்று மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

சாலை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்பகுதியில் இவ்வாறு கடல் அட்டை பிடிப்பவர்களின் சட்டவிரோத செயற்பாடுகளால், வாழ்வாதாரம் இழந்திருக்கும் உள்ளூர் மீனவர்கள் குறித்து, கடற்றொழில் அமைச்சு அக்கறை செலுத்தி மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்று, பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

செ. கீதாஞ்சன்

தமிழகம்

'ஒன்றிய அரசாங்கம்' பின்னணியில் உள்ள திட்டம் என்ன?

# முதலமைச்சரிடம் குஷ்பு கேள்வி

அன்றைக்கு மத்திய அமைச்சர்கள் என்று பெருமையோடு அழைத்த நீங்கள், இன்று ஒன்றிய அரசாங்கம் என்று அழைப்பதன் பின்னணியில் உள்ள திட்டம் என்ன முதலமைச்சரே? என குஷ்பு கேள்வி எழுப்பியுள்ளார்.



திராவிட முன்னேற்ற கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் மத்திய அரசாங்கம் என்று அழைக்காமல், ஒன்றிய அரசாங்கம் என்றே அழைத்து வருகின்றன. இது தொடர்பாக பாரதிய ஜனதா கட்சி தனது கண்டனத்தைப் பதிவு செய்து வருகிறது.

அண்மையில் எச். ராஜாவும் இதனைக் கண்டித்திருந்தார். அப்போது அவர், மத்திய அரசாங்கத்தை ஒன்றிய அரசாங்கம் என்று அழைத்தால், மாநில அரசாங்கத்தை ஊராட்சிகளின் அரசாங்கம் என்று அழைப்பீர்களா என ஸ்டாலினிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

நேற்று (24) காலையில், 'ஒன்றியம்' என்ற வார்த்தையைப் பார்த்து, யாரும் மிரளத் தேவையில்லை. அந்த ஒரு வார்த்தையில் கூட்டாட்சித் தத்துவம் அடங்கியிருக்கிறது. அதற்காகத்தான் அதை நாங்கள் பயன்படுத்துகிறோம், பயன்படுத்துவோம், பயன்படுத்திக் கொண்டேயிருப்போம் என சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஸ்டாலின் பேசினார்.

இந்நிலையில் பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் குஷ்பு, இது தொடர்பாகத் தனது ட்விட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

'மன்னிக்கவும் முதலமைச்சரே! இந்தியா, மாநிலங்களால் ஆனது அல்ல. மாறாக, இந்தியாவால் உருவாக்கப்பட்டவையே மாநிலங்கள். கருத்துச் சொல்வதற்கு முன்னர், எதையும் வாசித்துப் புரிந்துகொண்டு பேசுங்கள். ஆகவே முதலமைச்சரே! இனி நம் தேசத்தை, 'இந்தியா' அல்லது 'பாரதம்' என்ற அதன் இயற்பெயர் மூலமே அழைப்பீராக' என குறிப்பிட்டுள்ளார் குஷ்பு.

புதுடெல்லி

வழக்குகளில் இருந்து பாதுகாக்குமாறு

## 'உச்ச நீதிமன்றை கோரினார் பாபா'



தனக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகளில் இருந்து, தனக்குப் பாதுகாப்பு வழங்கக்கோரி, உச்ச நீதிமன்றத்தில் பாபா ராம்தேவ் முறையிட்டுள்ளார்.

யோகா குருவான பாபா ராம்தேவ், "அலோபதி மருத்துவத்தால் இலட்சக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். அலோபதி மருத்துவம் முட்டாள்தனமானது" என்றார். இது, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு, இந்திய மருத்துவ சங்கம் கடும் கண்டனம் தெரிவித்தது. இதையடுத்து, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், அலோபதி மருந்துகள் குறித்த கருத்துகளை வாபஸ் பெறும்படி, பாபா ராம்தேவிடம் வேண்டுகோள் விடுத்தார். அதை ஏற்று, பாபா ராம்தேவும், தன் கருத்தை திரும்பப் பெற்றார்.எனினும், பாபா ராம்தேவுக்கு எதிராக, பல மாநிலங்களில், வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

புதுடெல்லி

இண்டிகோ விமான சேவை:

## தடுப்பூசி செலுத்தியிருந்தால் 10% கட்டண சலுகை

குறைந்த பட்சம் ஒரு கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ள பயணிகளுக்கு, கட்டணத்தில் 10 சதவீதம் தள்ளுபடி வழங்க, இண்டிகோ விமான சேவை நிறுவனம் முன்வந்துள்ளது.



அடிப்படைக் கட்டணத்தில் 10 சதவீத சலுகை என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் முன்பதிவு செய்யும் பயணிகளுக்குத்தான் வழங்கப்படும் என்று அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில், இண்டிகோ விமான சேவை நிறுவனத்தின் தலைமை வருவாய்த் துறை அதிகாரி சஞ்சய் குமார் தெரிவித்துள்ளதாவது:

குறைந்தபட்சம் ஒரு கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ள பயணிகளுக்கு, அடிப்படை கட்டணத்தில் 10 சதவீத சலுகை வழங்கப்படும். இது, முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு வழங்கப்படும். இச்சலுகையைப் பெறும் பயணிகள் 18 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். முன்பதிவு செய்யும்போது அவர்கள் இந்தியாவுக்குள் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சூரத்

அவதூறு பேசியதாக வழக்கு

## ராகுல் மீண்டும் ஆஜரானர்




அவதூறு பேசியதாகத் தொடரப்பட்ட வழக்கில் காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி, சூரத் நீதிமன்றத்தில் இறுதி வாக்குமூலம் அளிப்பதற்காக நேற்று (24) மீண்டும் ஆஜரானர்.

மக்களவைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ராகுல் காந்தி, "ஏன் திருடர்கள் அனைவரின் பெயருக்கு பின்னால் மோடி என்ற பெயர் இருக்கிறது. நிரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி" என்று பேசியதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக ராகுல் காந்தி மீது நடவடிக்கை எடுக்ககோரி, குஜராத் மாநிலம் சூரத் நீதிமன்றத்தில் பா.ஜ.க எம்எல்ஏ புர்னேஷ் மோடி வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

வழக்கு விசாரணையின்போது, ராகுல் காந்தி நேரில் ஆஜராக வேண்டும் என நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். ராகுல் காந்தி, சூரத் நீதிமன்றத்தில் ஆஜரானார். அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், அவதூறாக ஏதும் பேசவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில், தனது இறுதி வாக்குமூலத்தை சமர்ப்பிப்பதற்காக ராகுல் காந்தி மீண்டும் ஆஜராக வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டு இருந்தார். அதன்படி ராகுல் காந்தி நேற்று நேரில் ஆஜரானார்.

தமிழகம்

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி

## அரசியல், கொள்கை வாரிசு நான்தான்



"நான் அண்ணாவின் அரசியல் வாரிசு; கருணாநிதியின் கொள்கை வாரிசு" என, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை,ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையுடன் தொடங்கியது. இதையடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம், கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்றது.

இந்த விவாதங்களில், கட்சிகளைச் சார்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் பல்வேறு விவகாரங்கள் குறித்தும் கேள்வி எழுப்பினர். அதற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அப்போது பேசியதாவது: "எங்களின் ஆட்சி நீதிக்கட்சியின் தொடர்ச்சி; நீதிக்கட்சியின் தொடர்ச்சி அண்ணா. அண்ணாவின் தொடர்ச்சி கருணாநிதி. கருணாநிதியின் தொடர்ச்சி நான். தமிழினத்தை நம்மால் தான் வளர்ச்சி பெற வைக்கமுடியும் என மக்கள் எம்மை ஆட்சியில் அமரவைத்துள்ளார்கள். என்னுடைய தொலைநோக்குப் பார்வையைத்தான் ஆளுநர் தன் உரையில் கோடிட்டுக் காட்டியுள்ளார் என்றார்.

புதுடெல்லி

15 ஆண்டுகளுக்குப் பின்னர்

## ரயிலில் ஊர் செல்லும் குடியரசுத் தலைவர்



குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், டெல்லி சப்தர்ஜங் ரயில் நிலையத்திலிருந்து சிறப்பு ரயில் மூலம் இன்று கான்பூர் செல்கிறார். குடியரசுத் தலைவராக இருக்கும் ஒருவர் 15 ஆண்டுகளுக்கு பின்னர் ரயில் பயணம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

15 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின், குடியரசுத் தலைவர் ஒருவர் ரயில் பயணம் மேற்கொள்கிறார்.

கடைசியாக, 2006ஆம் ஆண்டு அப்போதைய குடியரசுத் தலைவர் டொக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம், டெல்லியிருந்து சிறப்பு ரயில் மூலம் டேராடூன் சென்று, இந்திய இராணுவ அகாடமியின் பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.

# அகவை 12இல் வசந்தம் தொலைக்காட்சி

'என் கடன் பணி செய்து கிடப்பதே' – திருநாவுக்கரசர்




இந்த உலகத்தில், இதுவரை எத்தனை அதிநவீன பொழுதுபோக்கு அம்சங்கள் வந்திருந்தாலும் தொலைக்காட்சிக்கு இருக்கக்கூடிய மதிப்பும் சிறப்பும் சற்றேனும் குறையவில்லை. சிறியோர் முதல் பெரியோர் வரை, வயது வேறுபாடின்றி அனைவரும் கண்டுகளிக்கக்கூடிய ஒரு சிறப்பான பொழுதுபோக்கு அம்சம் என்றால், அந்தப் பெருமை தொலைக்காட்சியையே சேரும். அதிலும், 'வசந்தம்' தொலைக்காட்சி, தமிழ் பேசும் மக்களின் அபிமானம் வென்று, வீறுநடை போடும் அலைவரிசையாகும்.

ஏனென்றால், இலங்கையில் எத்தனையோ தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகள் இருக்கின்ற போதிலும் கூட, வசந்தம் தொலைக்காட்சியினுடைய நிகழ்ச்சிகளும் அதனுடைய படைப்புகளும் மக்கள் மத்தியில் அதிகமாக விரும்பிப் பார்க்கப்படுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாக அமைந்திருக்கின்றன.

குறிப்பாக, நாம் இதுவரை காலமும் தென்னிந்தியா அல்லது ஏனைய உலக நாடுகளுடைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தே, பிரமித்துப் போயிருந்தோம். அவர்களுடைய நிகழ்ச்சித் தயாரிப்பு முறைகள், அந்நாட்டு கலைஞர்களின் திறமைகள் ஆகியவற்றைக் கண்டு வியந்திருந்தோம்.

ஆனால், எங்களுடைய நாட்டில் இருக்கக்கூடிய கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மட்டுமல்லாமல், இலங்கைக்கே உரித்தான குறிப்பாக, 100 % இலங்கையரின் தாயாரிப்புகள் எனச் சொல்வதற்கு ஏதுவாக, முற்றுமுழுதாக இலங்கையர்களுக்கு அதிகமான வாய்ப்புகளைக் கொடுத்து, தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளையே வசந்தம் தொலைக்காட்சி, இன்றுவரை ஒளிபரப்பி வருகிறது.

குறிப்பாக, தென்னிந்தியத் திரைப்படம், நாடகங்களைத் தவிர மற்ற அனைத்து நிகழ்ச்சிகளும் இலங்கை கலைஞர்களையும் ஊழியர்களையும் கொண்டு உருவாகும் தயாரிப்பு நிகழ்ச்சிகளாகவே அமைந்திருக்கின்றன. அதுமட்டுமன்றி, ஏனைய தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளைப் பிரதி செய்து ஒளிபரப்புச் செய்யாமல், எங்கள் மண்ணின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் மதிக்கும் வகையில், நிகழ்ச்சிகளைப் படைப்பதுதான் வசந்தம் தொலைக்காட்சியின் தனித்துவமாகவும் சிறப்புப் பண்பாகவும் அமைந்திருக்கிறது.

அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றாக, காலை வேளையில் ஒளிபரப்பாகும் நான்கு மதங்களையும் துதித்துப் போற்றும் விதத்தில் 'ஆராதனை' நிகழ்ச்சி அமைந்திருக்கின்றது. அதைத் தொடர்ந்து வரக்கூடிய பத்திரிகைக் கண்ணோட்டம், 'சுயாதீன செய்திப் பார்வை' நிகழ்ச்சியானது, இலங்கையில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளின் செய்திகளை, ஒருமித்துத் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக, கொரோனா வைரஸ் தொற்றானது, இலங்கையை மட்டுமல்லாமல், உலக நாடுகளுக்குப் பாரியதோர் அச்சுறுத்தலாக இருக்கிறது. ஆனாலும், ஊடகம் என்ற வகையில் கொவிட் - 19 பெருந்தொற்றுக் குறித்ததாகவும் சரி, மற்ற விடயங்களாக இருந்தாலும்



கே. எஸ் திருக்கோணேஸ்
வசந்தம் தொலைக்காட்சி முகாமையாளர்

சரி, அனைத்தையும் துல்லியமாகவும் நடுநிலையாகவும் சொல்ல வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் 'வசந்தம்' தொலைக்காட்சிக்கு இருக்கின்றது. அதிலும், அரச ஊடகம் எனும் பொழுது, இன்னும் அதிகமாக அந்தப் பொறுப்பு காணப்படுகிறது.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் கூட, குறைந்த ஊழியர்களோடு, தங்கு தடையின்றி அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பும் ஒரு தொலைக்காட்சி என்பதில், 'வசந்தம்' தொலைக்காட்சிக்குப் பாரிய பொறுப்பும் கடமையும் இருந்திருக்கின்றது என்பதை இரசிகர்கள் அறிவார்கள். அந்தக் கடமையை செவ்வனே, வசந்தம் தொலைக்காட்சி நிறைவேற்றி இருக்கிறது. இந்தக் கொரோனா வைரஸ் பரவல் காலகட்டத்திலும் முடிந்தளவு, பல்வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக வழங்கி வந்திருக்கின்றது.

குறிப்பாக, இலங்கை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் விரும்பிப் பார்க்கக் கூடியதும் எதிர்பார்த்திருக்கும் நிகழ்ச்சியாக, 'சுயாதீன செய்திப் பார்வை' நேரடி நிகழ்ச்சியை, எந்தவொரு காலத்திலும் நிறுத்தாது, ஒளிபரப்பி வந்திருக்கின்றோம். குறிப்பாக, இந்தப் பேரிடர் காலகட்டத்திலும்கூட, பத்திரிகைகளினது விநியோக நடவடிக்கைகளில் தடங்கல்கள் காணப்படுகின்றன. பலவேளைகளில், சில பத்திரிகைகளே சந்தையில் கிடைக்கப்பெறுகின்றன. எனவே, கைக்குக் கிடைக்கப்பெறும் பத்திரிகைகளையும் மின்னிதழ்களையும் மாத்திரம் வைத்துக்கொண்டு, தொடர்ச்சியாக 'சுயாதீன செய்திப் பார்வை' நிகழ்ச்சியை ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை வழங்கி வருகின்றோம் என்பது, மற்றுமொரு சிறப்பாக அமைகின்றது,

அதேபோன்று, இரசிகர்களுடைய கருத்துகளை உள்வாங்கக்கூடிய 'தலைவாசல்' நேரடி நிகழ்ச்சியும்கூட எந்தவிதமான தங்கு தடையுமின்றி, முடிந்தளவுக்கு இரசிகர்களுக்கானதாக ஒளிபரப்பப்பட்டு வருவது, இன்னுமொரு சிறப்பான விடயமாக இருக்கின்றது. இப்படி, பேரிடர் சூழ்நிலையிலும்கூட, மக்களுக்கு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வரும் ஒரு தொலைக்காட்சி அலைவரிசை என்றால் அது 'வசந்தம்' தொலைக்காட்சிதான்.

இதைத் தொடர்ந்து, ஒளிபரப்பாகும் 'நினைத்தாலே இனிக்கும்' நிகழ்ச்சி, பழைய பாடல்களை விரும்பிக் கேட்கக்கூடிய இரசிகர்களுக்கு அந்த நிகழ்ச்சியின் பெயரைக் கேட்டாலே இனிக்கும் என்றே சொல்லலாம்.

அதுமட்டுமன்றி, புத்தம்புதிய பாடல்களோடும் சமூக வலைத்தளங்களோடு இணைந்து, இளம் வயதினரின் மனதைக் கொள்ளை கொள்ளும் நிகழ்ச்சிகளாக 'ஹலோ வசந்தம்', 'மியூசிக் எக்ஸ்பிரஸ்', 'சண்டே கபே', 'ட்ரெண்ட விடுங்க' எனப் பலதரப்பட்ட படைப்புகளுக்கும் பஞ்சமில்லை.

வசந்தம் தொலைக்காட்சியில், கலைஞர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சியாக, 'எம். ஸ்டுடியோ' நிகழ்ச்சி அமைந்துள்ளது.

சமூகப் பொறுப்புள்ள ஊடகம் என்ற கண்ணியத்தைச் சம்பாதித்த வசந்தம் தொலைக்காட்சி, மாணவர்களுக்காகவும் தேடல் மீது ஆர்வம் கொண்டவர்களுக்காகவும் அறிவியல் நிகழ்ச்சிகளை வழங்குவதிலும் பின்நிற்கவில்லை. 'சுற்றிவரும் பூமி' நிகழ்ச்சி அதற்குச்சான்று பகிர்கிறது.

அதேபோல, திரைப்படங்களை ஒளிபரப்புவதோடு மாத்திரம் நின்றுவிடாது, உலக சினிமாவைப் பேச, 'ஒஸ்கார்' நிகழ்ச்சியும் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகியவற்றை உலக சினிமாவோடு ஒப்பிட்டுப் பேச, 'ரீல் பெட்டி' போன்ற நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகின்றன.

இலங்கையில் ஒளிபரப்பாகும் ஏனைய தொலைக்காட்சி அலைவரிசை நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடும்போது, 'வசந்தம்' தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படம், தொலைக்காட்சித் தொடர்களைத் தவிர, ஏனைய அனைத்து நிகழ்ச்சிகளும் உள்ளூர் கலைஞர்களின் முழுமையான பங்களிப்புகளுடனேயே தயாரித்து ஒளிபரப்புச் செய்யப்படுகின்றது. அதாவது, ஏனைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் போன்று, வெளிநாட்டு நிகழ்ச்சிகளை 'கொபி பேஸ்ட்' செய்வதில்லை.

ஆகவே, வசந்தம் தொலைக்காட்சி சேவையில் பணியாற்றும் இளைஞர் அணி பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். வசந்தத்தின் ஊழியர்களின் அயராத உழைப்பு, புத்ததாக்க சிந்தனைகள், கூர்மையான தேடல் ஆகியவற்றுடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதன் நிமித்தம், இலங்கை மக்கள் அனைவரும் இரசிக்கக்கூடியதும் கட்டாயம் பார்க்கத்தூண்டும் ஆர்வத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை வழங்கி வருவதே, இந்த 12 ஆண்டுகளின் வெற்றியின் இரகசியமாக காணப்படுகிறது.

எனவே, இந்த வெற்றியின் முக்கிய பங்குதாரர்களாக இருக்கக்கூடிய வசந்தம் தொலைக்காட்சியின் இரசிகர்களுக்கு, மனமார்ந்த நன்றிகள். மேலும், வசந்தம் தொலைக்காச்சியின் விளம்பரதாரர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில், சிரம் தாழ்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். கொவிட் -19 பெருந்தொற்றுக்குப் பின்னர், இலங்கை மண்ணின் வாசனை கமழும் சுவாரஷ்யம் ததும்பும் இன்னும் பல நிகழ்ச்சிகளை, இலங்கை படைப்பாளர்களையும் கலைஞர்களையும் பயன்படுத்திப் படைப்போம் என்பதில் திடசங்கற்பத்துடன் இருக்கின்றோம்.

–தினேஸ் சுந்தர்

எதியோப்பியா

திக்ரே சந்தையில் விமானக் குண்டு வீச்சு:

# 60 பேர் பலி

வடட பிராந்தியமான திக்ரேயில் உள்ள சந்தை ஒன்றின் மீது எதியோப்பியாவின் விமானப் படை குண்டு வீசிய நிலையில், 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

திக்ரேயில் தலைநகர் மெகெல்லேயிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள டொகொகா நகரத்தின் மீதே நேற்று முன்தினம் எதியோப்பிய விமானப் படை தாக்கியதாக சம்பவத்தைக் கண்ணுற்றோர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பொதுமக்களை இலக்கு வைத்ததை எதியோப்பிய இராணுவம் மறுத்ததுடன், பயங்கரவாதிகளை இல்லாமற் செய்வதற்கே தாக்குதல் நடத்தியதாகக் கூறியுள்ளது.

இதேவேளை, அண்மைய நாள்களில் முன்னேற்றங்களை அடைந்ததாக திக்ரே படைகள் தெரிவித்துள்ளன. எனினும், இதை எதியோப்பிய அரசாங்கம் மறுத்துள்ளது.



இந்நிலையில், கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாக்குதல் நடந்த இடத்தை அடைந்துள்ள எஞ்சியுள்ளவர்களுக்கு உதவுவதை எதியோப்பிய இராணுவத்தினர் முடக்கியதாக மருத்துவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.



தென்னாபிரிக்கா

## ‘10 குழந்தைகள் கதை உண்மையல்ல’

தென்னாபிரிக்க பெண்மணி ஒருவர் 10 குழந்தைகளை இம்மாதம் பெற்றெடுத்தமையானது உண்மையல்ல என உத்தியோகபூர்வ விசாரணை ஒன்று கண்டுபிடித்துள்ளது.

10 பிள்ளைகள் பிறந்ததாக கௌடெங் மாகாணத்திலுள்ள எந்தவொரு வைத்தியசாலைகளும் பதிவு செய்யவில்லை என மாகாண அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அப்பெண் அண்மையில் கர்ப்பிணியாக இருக்கவில்லை என தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், குறித்த பெண் உள நலத்துக்கான கண்காணிப்பின் கீழ் உள்ளதுடன், அவருக்கு ஆலோசனை அளிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா

## இலங்கைத் தமிழ் குடும்பத்துக்கு வீசா

கிறிஸ்மஸ் தீவுகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ்க் குடும்பத்தின் மூன்று உறுப்பினர்களுக்கு, மேற்கு அவுஸ்திரேலியாவில் பணியாற்ற, கற்க மூன்று மாத தற்காலிக வீசாக்களை அவுஸ்திரேலியா வழங்கியுள்ளது.

இக்குடும்பத்தின் இளைய பிள்ளையானது மருத்துவ அவசரநிலை காரணமாக கிறிஸ்மஸ் தீவிலிருந்து வெளியேற்றப்பட்ட இரண்டு வாரங்களிலேயே இந்நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், குடும்பத்தின் எந்த உறுப்பினர்களுக்கு வீசா வழங்கப்பட்டது என குடியேற்ற அமைச்சர் அலெக்ஸ் ஹவாக்கே தெரிவித்திருக்கவில்லை.




ரஷ்யா

## இலக்கு வைத்த ரஷ்ய ஜெட்கள்

கிறீமியாவுக்கு அருகால் சென்ற பிரித்தானிய போர்க் கப்பல் ஒன்றின் நிழலாக 20க்கும் மேற்பட்ட ரஷ்ய விமானங்கள், இரண்டு கரையோரக் காவற்படை கப்பல்கள் சென்றுள்ளன.

இந்நிலையில், கண்காணிப்புக் கப்பலொன்று எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்ததாகவும், எச்.எம்.எஸ் டிஃபென்டரின் பாதையில் ஜெட்டொன்று குண்டுகளைப் போட்டதாக ரஷ்ய பாதுகாப்பமைச்சு தெரிவித்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில், எந்தவொரு எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதை பிரித்தானிய அரசாங்கம் மறுத்துள்ளது.



இந்நிலையில், போர்க்கப்பலில் இருந்த பிரித்தானிய ஒளிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தியாளரொருவர், ரஷ்ய இராணுவத்தால் கப்பல் அச்சுறுத்தப்பட்டதாகக் கூறியுள்ளார்.

குறித்த கப்பலானது தென் உக்ரேனிலுள்ள ஒடெஸாவிலிருந்து ஜோர்ஜியாவுக்கு பயணித்துள்ளது.

ஈரான்

## அணுக் கட்டடம் மீதான தாக்குதல் முறியடிக்கப்பட்டது

ஈரானிய அணு சக்தி நிறுவனத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றின் மீதான தாக்குதல் ஒன்று முறியடிக்கப்பட்டதாக ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானின் சிவில் அணுத் திட்டத்தின் மீதான தாக்குதலானது நேற்று முன்தினம் முறியடிக்கப்பட்டதாக பாதுகாப்புச் சேவைக்கான நெருக்கமான ஈரானிய செய்தித் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், கட்டடத்தின் மீது ட்ரோன் ஒன்று தாக்குதல் நடத்த முயன்றதாக இஸ்லாமிய புரட்சிகர காவலர் படையினருடன் இணைந்த சமூக வலைத்தள அலைவரிசைகள் தெரிவித்துள்ளன.



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி:

# இந்தியாவை வீழ்த்தி சம்பியனான நியூசிலாந்து

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் நியூசிலாந்து சம்பியனானது.




சௌதாம்டனில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த இந்தியாவுடனான அறிமுக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே நியூசிலாந்து சம்பியனாகியுள்ளது.

நேற்று முன்தின ஆறாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 64 ஓட்டங்களுடன் ஆரம்பித்த இந்தியா, ஆரம்பத்திலேயே அணித்தலைவர் விராட் கோலி, செட்டேஸ்வர் புஜாராவை கைல் ஜேமிஸனிடம் பறிகொடுத்தது.


பின்னர் தொடர்ந்து வந்த அஜின்கியா ரஹானே, இரவீந்திர ஜடேஜா ஆகியோர் ட்ரெண்ட் போல்ட், நீல் வக்னரிடம் வீழ்ந்ததுடன், குறிப்பிட்ட நேரம் நின்ற றிஷப் பண்டும் 41 ஓட்டங்களுடன் அடுத்து போல்டிடம் வீழ்ந்தார்.

இதையடுத்து, இரவிச்சந்திரன் அஷ்வின், மொஹமட் ஷமி, ஜஸ்பிரிட் பும்ரா ஆகியோர் போல்ட், டிம் சௌதியிடம் வீழ்ந்த நிலையில், சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது இரண்டாவது இனிங்ஸில் 170 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

அந்தவகையில், 139 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸை நிதானமாக ஆரம்பித்த நியூசிலாந்து, டொம் லேதம், டெவோன் கொன்வேயை குறிப்பிட்ட இடைவெளிகளில் இரவிச்சந்திரன் அஷ்வினிடம் பறிகொடுத்தது.

எவ்வாறெனினும், அடுத்து இணைந்த அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனின் ஆட்டமிழக்காத 52, றொஸ் டெய்லரின் ஆட்டமிழக்காத 47 ஓட்டங்களுடன் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் நியூசிலாந்து வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஜேமிஸன் தெரிவானார்.



பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

## ஆறாமிடத்துக்கு முன்னேறிய றபாடா

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சளர்களின் தரவரிசையில் ஆறாமிடத்துக்கு தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சாளர் ககிஸோ றபாடா முன்னேறியுள்ளார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் ஐந்து விக்கெட்டுகளைக் கைப்பற்றியதையடுத்தே, ஏழாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தை றபாடா அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. டிம் சௌதி, 4. ஜொஷ் ஹேசில்வூட், 5. நீல் வக்னர், 6. ககிஸோ றபாடா, 7. ஸ்டுவர்ட் ப்ரோட், 8. ஜேம்ஸ் அன்டர்சன், 9. மிற்செல் ஸ்டார்க், 10. ஜேஸன் ஹோல்டர்.

இதேவேளை, குறித்த டெஸ்டில் 96 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் குயின்டன் டி கொக், 12ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## இலங்கையை வீழ்த்திய இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் இலங்கை தோல்வியடைந்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கார்டிஃப்பில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் குஷல் பெரேரா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஆரம்பத்திலிருந்தே சாம் கர்ரன் (2), கிறிஸ் ஜோர்டான், லியாம் லிவிங்ஸ்டோன், மார்க் வூட், அடில் ரஷீட்டிடம் (2) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்த நிலையில், தசுன் ஷானகவின் 50 (44), குஷல் பெரேராவின் 30 (26) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.



பதிலுக்கு, 130 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஜேஸன் றோய், ஜொஸ் பட்லர் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றதுடன், றோயை 36 (22), டேவிட் மலனை டுஷ்மந்த சமீர, இசுரு உதானவிடம் இழந்தது.

எனினும், ஜொஸ் பட்லரின் ஆட்டமிழக்காத 68 (55) ஓட்டங்களுடன் 17.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இங்கிலாந்து அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பட்லர் தெரிவானார்.

கோப்பா அமெரிக்கா தொடர்:

## கொலம்பியாவை வென்ற பிரேஸில்

பிரேஸிலில் நடைபெற்று வரும் கோப்பா அமெரிக்கா தொடரில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், கொலம்பியாவுக்கும் இடையிலான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் பிரேஸில் வென்றது.

பிரேஸில் சார்பாக, றொபேர்ட்டோ பெர்மினோ, கஸேமீரோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, கொலம்பியா சார்பாகப் பெறப்பட்ட கோலை லூயிஸ் டயஸ் பெற்றிருந்தார்.



யூரோ கிண்ணத் தொடர்:


## விலகல் சுற்றில் போர்த்துக்கல், பிரான்ஸ், ஜேர்மனி

யூரோ கிண்ணத் தொடரின் விலகல் முறையிலான சுற்றுக்கு போர்த்துக்கல், பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெய்ன், சுவீடன் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

ஹங்கேரியில் நேற்று அதிகாலை நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் போர்த்துக்கல், பிரான்ஸுக்கு இடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையிலேயே இரண்டு அணிகளும் விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

போர்த்துக்கல் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் கிறிஸ்டியானோ றொனால்டோ பெற்றதோடு, பிரான்ஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் கரிம் பென்ஸீமா பெற்றிருந்தார்.

இப்போட்டி முடிவின் மூலம் பிரான்ஸ் குழுவில் முதலிடம் பெற்றதுடன், போர்த்துக்கல் மூன்றாமிடத்தை பெற்றிருந்தாலும், மேம்பட்ட மூன்றாமிடத்தை பெற்ற நான்கு அணிகளில் ஒன்றாக விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றிருந்தது.



இதேவேளை, குறித்த போட்டியில் பெற்ற இரண்டு கோல்களின் மூலம் சர்வதேச கால்பந்தாட்ட போட்டிகளில் அதிக கோல்களைப் பெற்ற ஈரானி அலி டயேயின் 109 கோல்கள் என்ற சாதனையை றொனால்டோ சமப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், ஜேர்மனியில் நடைபெற்ற அவ்வணிக்கும், ஹங்கேரிக்கும் இடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையிலேயே, குழுவில் இரண்டாமிடம் பிடித்து விலகல் முறையிலான சுற்றுக்கு ஜேர்மனி தகுதி பெற்றிருந்தது. ஹங்கேரி தொடரிலிருந்து வெளியேறிருந்தது.

ஜேர்மனி சார்பாக, கை ஹவேர்ட்ஸ், லியோன் கொரெட்ஸ்கா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 25 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.